ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2011/9 - 2017 මාර්තු මස 21 වැනි අඟහරුවාදා - 2017.03.21

*2011/9 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்*

*14 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் மூலம் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர், மலிக் சமரவிக்ரம ஆகிய நான், நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன், 2016.11.11 ஆந் திகதிய 1992/52 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் (2) ஆம் பந்தியிலுள்ள* (ix) *ஆம் இலக்க விடயத்திற்கு உடனடுத்து பின்வரும் புதிய விடயங்களை உட்புகுத்துவதன் மூலம் திருத்தியமைக்கப்படுகிறது என இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகிறேன்.*

(x) *கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சின் செயலாளரின் சிபாரிசின் பேரிலும் மற்றும் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதிக்கிணங்கவும் உள்நாட்டு பெறுமதிசேர்ப்பு செய்முறைக்காக அடையாளக் குறியினையுடைய ரயர் தயாரிப்பாளர்களினால் இறக்குமதி செய்யப்படும் எவ்வித வரியடையாளமுமின்றிய பெயர் நாமமின்றிய புத்தம் புதிய ரயர் காப்புகள் ;*

(xi) *கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சின் செயலாளரின் சிபாரிசின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் உள்நாட்டில் வீல் தகடுகளைத் தயாரிப்பவர்களால் இறக்குமதி செய்யப்படும், வெப்ப உருளைக் குழாய், வெப்ப உருளைக் கட்டி அல்லது பிற வடிவங்களுடைய குழாய் போன்ற வடிவங்களில் மேலதிக வேலைகள் செய்யப்படாத கம்பி பட்டைகளும் தண்டுகளும் ;*

(xii) *கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் சிபாரிசின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன், உள்நாட்டு கால்நடை பண்ணையாளர்களுக்கு ஸைலேஜ் தயாரிப்பாளர் ஒருவரினால் இறக்குமதி செய்யப்பட்ட ஏகபரிமாண குறை அடர்த்தி கொண்ட பொலித்தீன்.*

*இக்கட்டளையானது 2017, மாச்சு மாதம் 22 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும்.*

*மலிக் சமரவிக்ரம,*
*அபிவிருத்தி, உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்.*

*அபிவிருத்தி, உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2017, மாச்சு 17.*

*04- 50*

1A - PG 3458 — 557 (2017/03) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*